ஆகவே, எந்தவகையிலும் உறுப்பினர்களுடைய உரிமையைக் கப்பட்டுத்தவேண்டும் என்பது எனக்கு இல்லை. நானும் இந்த அவையில் உறுப்பினனாக இருந்திருக்கிறேன். ஆகவே, திரு. கோதண்டராமன் அவர்கள் மேலும் விளக்கம்பெற வேண்டினால் கவன ஈர்ப்பு அறிவிக்கை கொடுக்கலாம்.

திரு. வி. கே. கோதண்டராமன்: நான் ஏற்கனவே விதி 41-ன் கீழ் கொடுத்த அறிவிக்கைக்கு 1½ மாதத்திற்குப் பிறகும் விளக்கம் வரவேயில்லை. (மணி அடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இப்போது அப்படி இல்லை. மிக விரைவாகவே விளக்கம் கொடுக்கப்படுவதற்கு நான் ஏற்பாடு செய்கிறேன் என்ற உறுதியைக் கொடுத்திருக்கிறேன். அந்த உறுதி காப்பாற்றப்படும்.

• • • • •

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. எ. பாலசுப்பிரமணியன் பேசுவதற்கு எழுந்ததிலிருந்து இதுவரையில் நடந்த நிகழ்ச்சிகளையெல்லாம் சபை நடவடிக்கைகளிலிருந்து நீக்கிவிட வேண்டும்.

திரு. பி. ஜி. கருத்திருமன்: எந்தப் பத்திரிகையிலும் வெளி வரக்கூடாது என்பதையும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பத்திரிகைகளும் இந்தச் செய்திகளை வெளியிடக்கூடாது.

Powers of Sub-Magistrates.

*57 *Q.*—THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether any recommendation has been received by the Government from the High Court on the empowering of the Sub-Magistrate with the powers of First Class Magistrates; and

(*b*) if so, the present stage of the matter?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: இது போன்ற நிலைமை ஆந்திரா போன்ற மாநிலங்களில் இருந்து வருவதாகத் தெரிகிறது. அதனால் அங்கு மாஜிஸ்ட்ரேட்டுகள் உற்சாகத்துடன் பணி புரிந்து வருவதாக அறிகிறேன். அது போன்று நம்முடைய மாநிலத்திலும் மாற்றுவதற்கு பரிசீலனை செய்ய அரசு முன் வருமா?

* பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்ிணங்க நீக்கப்பட்டது.

1968 ஆகஸ்ட் 20]

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு பஸ்ட் கிளாஸ் பவர் கொடுக்கப்பட்டது என்பது மற்ற மாநிலங்களிலும் இல்லை. 'இன்டகிரேஷன் ஆப் எஸ். எம். எஸ். அண்டு எஸ். டி. எம். எஸ்.' என்பது ஆந்திராவில் அமலில் இருக்கிறது. கேரளாவில் ஒரு பகுதி மட்டும் அமலில் இருக்கிறது. இதைப் பற்றி உயர்நீதி மன்றம் பரிசிலித்து தக்க ஆலோசனைகளைக் கூறினால் இந்த அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

திரு. டி. மார்டின் : இது நீதித் துறையைப் பொறுத்தமட்டில் இருப்பதால் இதனை கேட்கின்றேன். சப் ஜட்ஜ்களுடைய ரிடையர்மெண்ட் வயதை 55-ல் இருந்து 58 ஆக ஆக்கும் கோரிக்கை பல நாட்களாக இருந்து வருகிறது. அது பற்றி அரசு என்ன முடிவு எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது இருக்கக்கூடிய முறையே நீடித்து இருக்க வேண்டுமென்று அரசு முடிவு செய்திருக்கிறது.

திரு. சு. துரைசாமி: சப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு மாஜிஸ்ட்ரேட் அதிகாரம் கொடுக்காவிட்டாலும் அவர்களுக்குக் கொடுக்கக் கூடிய சம்பளம் 250—400 என்ற குறைந்த வீதத்தில் இருப்பதால் அதை 300—600 என்ற அளவுக்காவது கூட்டிக் கொடுக்கும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுக்க வேண்டியது மிகவும் அவசியம் என்பதை இந்த அரசாங்கம் உணருகிறது. நிதி வசதியைப் பொறுத்து யோசித்துக் கொண்டிருக்கிறோம்.

திரு. சா. மெய்யப்பன்: சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் முன்சீப்புகளின் சம்பளத்தையும், தகுதியையுமாவது பெறவேண்டும். அவர்களுடைய படிப்பு எல்லாம் ஒன்றுதான். ஆகவே, முன்சீப்புகளுக்கு செலெக்ஷன் செய்யும்போது சப் மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு முதலிடம் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அதுதான் இன்டகிரேஷன் ஆப் எஸ். எம். எஸ்., எஸ். டி. எம். எஸ். அண்டு டிஸ்ட்ரிக்ட் முன்சிப்ஸ். ஆந்திராவில் பின்பற்றி வருகிறார்கள். இப்போதே முன்சீபுகளைத் தேர்ந்தெடுக்கும்போது ஒரு பகுதி எஸ் எம்.-களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : சமீபத்தில் சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் கெஜெட் பதிவு பெற்ற அதிகாரிகளாக மாற்றப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மற்ற இலாக்காக்களில் கெஜெட் பதிவு பெற்ற அதிகாரிகள் பெறும் சம்பளம் அளவுக்காவது மாற்றிக் கொடுக்க அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாங்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது அவர்களை கெஜெட் பதிவு பெற்றவர்களாக மாற்றுவதோடு சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று அப்போதைய முதலமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொண்டோம். அவர்கள் கெஜெட் பதிவு ஆக்குவதற்கு ஒத்துக் கொண்டார்கள், சம்பளம் கூட்டிக் கொடுக்க முடியாது என்று கூறி விட்டார்கள். இப்போது நம்முடைய அரசாங்கம் அவர்களுக்குச் சம்பளத்தைக் கூட்டிக் கொடுப்பதுபற்றி பரிசீலித்து வருகிறது.

திரு. டி. மார்டின்: சென்னை உயர்நீதி மன்றத்தில் பணி புரியும் பணியாளர்களுக்கு தலைமைச் செயலகத்தில் கொடுக்கப்படும் போல் ஸ்கேல் ஆப் பே-யைப்போல் கொடுக்கவேண்டுமென்று கோரி தலைமை நீதி மன்றத்தில் இருந்து அரசுக்கு ஏதேனும் கோரிக்கை வந்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது சப் மாஜிஸ்ட்ரேட்டுகள் பற்றிய கேள்வி. தனிக் கேள்வி போடவும்.

சிறைச்சாலைகளுக்கு ஆலை அரிசி விநியோகம்

*** 58 வினா—திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு சட்ட, கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

சிறைச்சாலைகளில் கைதிகளுக்குத் தற்போது கொடுக்கப்பட்டு வரும் கைக்குத்தல் அரிசிக்குப் பதிலாக ஆலைகளில் தயாராகும் அரிசி கொடுக்கும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

திரு. எஸ். ஜே. ராமசாமி: சிறையில் அமைச்சர் அவர்கள் கூட இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கு கைக்குத்தல் அரிசி பயன்படுத்தப்படுகிறது. ஆனால் கைதிகள் அதைச் சாப்பிடுவது இல்லை. கைக்குத்தல் அரிசி சொசைடிகளும் சரியான முறையில் கைக்குத்தல் அரிசியைத் தயார் செய்து கொடுக்கவில்லை. ஆகவே, இதற்குப் பதிலாக வெளியிலிருந்து அரிசி வாங்கிக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைக்குத்தல் அரிசியில் சத்து இல்லையென்பதை ஒத்துக்கொள்ள முடியாது. சத்துள்ள உணவு என்ற காரணத்தால்தான் போடுகிறார்கள். இந்த அரிசி கிடைக்காவிட்டால் வெளியில் இருந்து வாங்கலாம் என்று இப்போதே உத்தரவு இருக்கிறது.

திரு. .இல. பலராமன் : தற்போது அரசினர் கைதிகளுக்கு கைக்குத்தல் அரிசி என்ற பெயரால் மில்களில் தயாரிக்கப்படும் அரிசி வழங்கப்படுவதாகப் புகார்கள் வந்துள்ளனவா ? அரசாங்கம் எடுத்த நடவடிக்கை என்ன ?